DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : எண்.ஸ்ரீனிவாசன் | Father/Husband Name : நாராயணசாமி |
| Age : 46 | Village : ரெங்கப்பநாயக்கன்பட்டி |
| Taluk : | Calling : தலைமை காவலர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the Jan 22, 2026 1:06 PM

(A1 present. A2 not present. Petition under Section 317 CrPC filed and allowed)

<u>**முதல் விசாரணை**</u> :-

1. நான் ரெங்கப்ப நாயக்கன் பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் சாத்தூர் தாலுகா காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணி செய்து வருகிறேன்.

2. நான் சாத்தூர் நகர் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரந்த போது 18.03.2017 ம் தேதி 12.30 மணிக்கு சாத்தூர் நகர் சார்பு ஆய்வாளர், சாத்தூர் சிறப்பு சார்பு ஆய்வாளர் லட்சுமணன், முதல் நிலை காவலர் 744 ஆகிய நான் மற்றும் காவலர் 2026 பாபு ஆகியோர் சாத்தூர் நகர் பகுதியில் மணல் தடுப்பு சம்பந்தமாக படந்தால் ரோந்து செய்த போது எங்களுக்கு கிடைத்த நம்பகமான தகவலின் படி ஐய்யனார் கோவிலின் தெற்கு ஆற்று பகுதிக்கு சென்றோம்.

3. அங்கு TN 67 R 3702 XL Super என்ற இருசக்கர வாகனத்தில் முன்பகுதியில் 3 பிளாஸ்டிக் சாக்கு பையும், பின்னால் 2 பிளாஸ்டிக் சாக்கு பையும், எடுத்து வந்த ஆண்டாள் புரத்தை சேர்ந்த ரெங்கையா மகன் பவுன்ராஜ், வயது 27/17, என்பவரை விசாரிக்க, "நேற்று இரவு நான் தென்றல் நகர் விளக்கில் நின்று கொண்டிருந்த போது படந்தால் காளியப்ப தேவர் மகன் பாலமுருகன் என்பவர் என்னிடம் வந்து வைப்பாற்றில் பிளாஸ்டிக் சாக்கு பையில் மணல் அள்ளி வைத்துள்ளேன், அதனை தென்றல் நகரில் இறக்க வேண்டும் என்று கூறினார். அதற்கு நான் ஏற்கனவே மணல் வழக்கில் சிறைச்சாலைக்கு சென்று வந்துள்ளேன் அதற்கு அவர் மணல் வழக்கிற்கு அதிகமான செலவு ஆகிவிட்டதாலும், வழக்கு நடத்துவதற்கு பணம் தேவை என்று கூறி என்னை அவருடைய இரு சக்கர வாகனமான TN 67 R 3702 என்ற வாகனத்தில் ஒரு நடைக்கு 5 சாக்கு பைகளை தென்றல் நகரில் இறக்கினால் ஒரு நடைக்கு ரூ.50/- தருவதாக கூறியதால் அவருடைய இருசக்கர வாகனத்தில் ஏற்றி வந்தேன் என்றும், ஏற்றி வந்த மணலுக்கு அரசு உரிமம் இல்லை என்றும் கூறினார்."

4. நீர்வளத்தையும், கனிம வளத்தையும் பாதிக்கக்கூடிய மணலை திருடிய குற்றத்திற்கு மேற்படி பவுன்ராஜை கைது செய்து, TN 67 R 3702 XL Super என்ற இருசக்கர வாகனத்தையும், அதிலிருந்த மணலுடன் கூடிய 5 பிளாஸ்டிக் சாக்கு பைகளையும் உதவி ஆய்வாளர் சசிகுமார் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினார். அந்த இடத்தில் தனிநபர் யாரும் கையொப்பமிட இல்லாததால் நானும், சிறப்பு சார்பு ஆய்வாளர் லட்சுமணனும் அத்தாட்சியில் சாட்சிகளாக கையொப்பமிட்டு எதிரியையும், அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட வாகனத்தையும், மணலையும், நிலையத்திற்கு 12.30 மணிக்கு கொண்டு வர உதவியாக இருந்தோம். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது

சாட்சி கையெழுத்து என்னுடையதாகும். அந்த அத்தாட்சியில் எதிரி பவுன்ராஜ் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் லட்சுமணன் ஆகியோர்களும், உதவி ஆய்வாளர் சசிகுமார் கையொப்பம் செய்தார். **(அத்தாட்சி அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

5. உதவி ஆய்வாளர் சசிகுமார் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 379 மற்றும் பிரிவு 21(1) கனிமவள சட்டத்தின் கீழான குற்றங்களுக்கு நிலைய குற்ற எண் 158/2017 ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். வழக்கு சம்பந்தமாக உதவி ஆய்வாளர் சசிகுமார் என்னை விசாரணை செய்தார்.

6. 2வது எதிரி பவுன்ராஜை பார்த்தால் என்னால் அடையாளம் காண்பிக்க முடியும்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

7. எங்கள் காவல் நிலைய பொதுநாட்குறிப்பை பார்வையிட்டால் சம்பவ தேதியில் நாங்கள் ரோந்து பணிக்கு சென்றோமா என்பது தெரியும் என்றால் சரிதான். ரோந்து பணிக்கு யார் யார் எந்த வாகனத்தில் சென்றோம் என்பதை உதவி ஆய்வாளர் என்னை விசாரித்த போது கூறினேனா என்றால் கூறினேன். காவல் நிலையத்திலிருந்து பகல் 8 மணிக்கு நாங்கள் ரோந்து பணிக்கு புறப்பட்டோம். எதிரியை நாங்கள் எத்தனை மணிக்கு கைது செய்தோம் என்றால் 12:30 மணிக்கு கைது செய்தோம். எங்கள் காவல் நிலையத்திலிருந்து படந்தாலுக்கு இருசக்கர வாகனத்தில் பத்து நிமிடத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். நாங்கள் சம்பவ இடத்திற்கு சென்ற பிறகு எதிரியை முடிவு செய்ய 5 நிமிடம் ஆகும் என்றால் சரிதான்.

8. ரோந்து பணிக்கு செல்லும்போது என்ன பொருட்கள் எல்லாம் கொண்டு செல்ல வேண்டும் என்பது எனக்கு தெரியுமா என்றால் வழக்கின் தன்மையை பொறுத்து அதற்கு தேவையான பொருட்களை கொண்டு செல்ல வேண்டும். இந்த வழக்கில் நாங்கள் என்ன பொருட்கள் எல்லாம் கொண்டு சென்றோம் என்றால் அத்தாட்சி தயாரிக்க தேவையான பேப்பர் போன்ற உபகரணங்களை கொண்டு சென்றோம். அத்தாட்சியில் கைப்பற்றப்பட்டதாக கூறும் ஐந்து பிளாஸ்டிக் பைகளில் எவ்வளவு மணல் இருந்தது என்பது குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

9. அத்தாட்சியில் எதிரி பவுன்ராஜ் எதிரி பாலமுருகன் வைப்பாற்றில் மூட்டைகளாக கட்டி வைத்துள்ள மணல்களை ஒரு நடைக்கு ஐந்து முறை வீதம் எடுத்து வர கூறியதாக கூறியுள்ள நிலையில் நாங்கள் பிடித்ததாக கூறும் மணல் மூட்டைகளை தவிர மிச்சம் எத்தனை முறைகள் அந்த இடத்தில் இருந்தது என்றால் மீதம் மூட்டைகள் எதுவும் இல்லை. நாங்கள் பிடித்ததாக கூறும் மணல் மூட்டைகளும் வண்டியில் வரும்போதுதான் பிடிக்கப்பட்டது என்றாலும், பாலமுருகனால் அள்ளி வைக்கப்பட்டதாக கூறப்படும் இடத்தில் வைத்து பிடிக்கப்படவில்லை என்றாலும் சரிதான். 2வது எதிரி பவுன்ராஜிடமிருந்து உதவி ஆய்வாளர் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றாரா என்றால் பெற்றார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை உதவி ஆய்வாளர் யார் முன்னிலையில் பெற்றார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

10. 2வது எதிரியை கைது செய்ததாக கூறும் இடத்தில் நாங்கள் எவ்வளவு நேரம் இருந்திருக்கும் என்றால் சுமார் அரை மணி நேரம் இருந்திருப்போம். நாங்கள் இந்த வழக்கில் கைப்பற்றியதாக கூறும் இருசக்கர வாகனத்தின் நிறம் எனக்கு தெரியுமா என்றால் ப்ளூ கலர் ஆகும். அத்தாட்சியில் வாகனத்தில் நிறம் குறிப்பிடப்பட்டுள்ளதா

என்றால் இல்லை. நாங்கள் 2வது எதிரியை கைது செய்ததாக கூறும் இடத்திற்கும் படந்தால் குடியிருப்பு பகுதிக்கும் சுமார் 50 மீட்டர் தொலைவில் இருக்கும் என்றால் சரிதான். பகல் 12:30 மணிக்கு அந்த பகுதியில் ஆட்கள் நடமாடுவார்கள் என்றால் சரிதான். ஆனால் உதவி ஆய்வாளர் தனிநபர் சாட்சி யாரையும் விசாரிக்கவில்லை என்றால் அந்த நேரத்தில் அங்கு யாரும் இல்லை.

11. சம்பவ இடத்திலிருந்து இருசக்கர வாகனத்தையும் மணல் மூட்டைகளையும் யார் காவல் நிலையத்திற்கு கொண்டு வந்தார் என்றால் நாங்கள் தான் கொண்டு வந்தோம். எதிரி பவுன்ராஜை உதவி ஆய்வாளர் சசிகுமார் அவருடைய இருசக்கர வாகனத்தில் அழைத்து வந்தார், TVS XL இருசக்கர வாகனத்தில் நான் 5 மணல் மூட்டைகளை ஏற்றுக்கொண்டு காவல் நிலையத்திற்கு கொண்டு வந்தேன். 2வது எதிரி பவுன்ராஜை கைது செய்த இடத்திலும், மணல் அள்ளப்பட்ட இடத்திலும் புகைப்படம் எடுத்தோமா என்றால் உதவி ஆய்வாளர் சசிகுமார் எடுத்தார்.

12. 2 வது எதிரி பவுன்ராஜை கைது செய்த இடத்திலிருந்து சாத்தூர் நகர் காவல் நிலையம் சுமார் 2 கிலோமீட்டர் தொலைவில் இருக்கிறது என்றால் சரிதான். அங்கு இருந்து காவல் நிலையத்திற்கு வர சுமார் 5 நிமிடத்தில் வந்துவிடலாம் என்றால் 15 நிமிடங்கள் ஆகும்.

13. சம்பவ இடத்திலோ அல்லது 2வது எதிரி கைது செய்யப்பட்ட இடத்திலே வைத்து அத்தாட்சி தயார் செய்யவில்லை என்றாலும், அந்த இடத்தில் வைத்து நான் அதில் கையொப்பம் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. 1வது எதிரி பாலமுருகனுக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் மற்றும் சொன்ன இடத்தில் வைத்து அத்தாட்சி தயார் செய்யப்பட்டு, அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்யவில்லை என்றாலும், அத்தாட்சி காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டு காவல் நிலையத்தில் வைத்து தான் நான் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல.

14. நான் சொல்வது போல் 1, 2 எதிரிகளுக்கும் இந்த வழக்கில் தயார் செய்யப்பட்டுள்ள அத்தாட்சிக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய மேலதிகாரி கேட்டுக் கொண்டபடி நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாவது சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Jan 22, 2026 1:35 PM

Judicial Magistrate 2, Sattur